### பெரம்பலூர் அரசு பள்ளி வளாகத்தில்

# பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் துப்புரவு பணி

## கலெக்டர் துவக்கி வைத்தார்

பெரம்பலூர், பிப்.25:
பெரம்பலூர் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் பள்ளி மாணவ, மாணவிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக சுற்றுச்சூழலை மாசுப்படுத்தும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் துப்புரவு பணியை பெரம்பலூர் கலெக்டர் சாந்தா தொடங்கி வைத்தார்.



பெரம்பலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாசுக்கட்டுப்பாடு வாரியம் சார்பில் கலெக்டர் சாந்தா பிளாஸ்டிக் ஒழிப்பு தூய்மை பணியை துவக்கி வைத்தார். அருகில் வாரிய உதவி செயற்பொறியாளர் பிரபாகரன்.

பெரம்பலூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பள்ளி மாணவ, மாணவிகளிடையே பிளாஸ்டிக் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, சுற்றுச்சூழலை மாசுப்படுத்தும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் துப்புரவு பணியை கலெக்டர் சாந்தா நேற்று துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி வளாகத்தில் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பெரம்பலூர் நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள், தனலெட்சுமி சுகர்ஸ் மற்றும் எம்ஆர்எப் நிறுவனங்கள் இணைந்து தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர். மேலும் பள்ளி வளாகத்தில் பிளாஸ்டிக் பயன்பாடு இல்லாமல் தூய்மையாக பராமரிப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்து மாணவ, மாணவிகளுக்கு எடுத்துரைத்து, நமது மாவட்டத்தை பிளாஸ்டிக் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாசுக் கட்டுபாடு மற்றும் சுற்றுசூழல் உதவிப்பொறியாளர் பிரபாகரன், நகராட்சி ஆணையர் வினோத், பெரம்பலூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சுந்தராஜன், தனலெட்சுமி சுகர்ஸ் நிறுவனத்தின் செயல் இயக்குநர் சின்னப்பன், மனிதவள அலுவலர் சேதுராமன், எம்ஆர்எப் நிறுவனத்தின் அலுவலர் அன்பரசன், பெரம்பலூர் தாசில்தார் பாரதிவளவன் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.